**தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் - 2019**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றுமற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும்உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில்இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.அந்நியமங்களின் கீழானஎனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,அதிகாரசபைதொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாகதொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினைமதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானதுநிறுவனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின்நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்டதரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின்வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின்உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்குஉள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின்செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின்அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின்வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியமம் 07 இன் 47 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணமானது தேவையானவாறு 03 அல்லது 05 வருடங்களிற்கு ஒரு தடவை மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும்,ரூபா 1,539,783,874 கிரயமான காணிகள் மற்றும் ரூபா 187,578,610 கிரயமான கட்டிடங்கள் 2005 ஆம் ஆண்டிலிருந்து மீள் மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்களின் மீள் மதிப்பீடானது ஏற்கனவே தொடங்கப்பட்டிருந்தது. 03 காணிகளின் உரிமையாண்மையை உறுதிப்படுத்தாமையால் (பண்டிருப்புவ, வல்விற்ற தோட்டம், அம்பக்கல வட்டேத்தலிலுள்ள 50 ஏக்கர் துண்டுநிலங்கள்) உரிய உரிமையாண்மைகளை பெறுமதி மதிப்பீடு திணைக்களம் உறுதிப்படுத்தும் வரை மதிப்பீடானது மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களானது நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு காட்டப்பட வேண்டும். |
| (ஆ) ரூபா 75,458,252 பெறுமதியான 141 மோட்டார் வானங்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்வதற்கு பதிலாக இப்பொழுதும் பயன்பாட்டிலுள்ளது ஆனால், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் அத்தகைய சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்துக்களானது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டில் வாகனங்களை மீள் மதிப்பீடு செய்வதற்கும் கணக்குகளில் சரிசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்வதற்கு பதிலாக தற்போது பயன்படுத்தப் படுகின்ற சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டிற்கான ஊழியர் பணிக்கொடையை கணிப்பீடு செய்வதற்கு, உள்ளபடியான மதிப்பீடு முறைமை பயன்படுத்தப்பட்டது. ஆனால் | வட்டி விகிதங்களானது 2019 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவு தளம்பலடைந்துள்ள மையால் | நியமத்தின் பிரகாரம் ஊழியர் பணிக்கொடை கணிப்பீடு செய்யப்பட்டு |

| | | |
|---|---|---|
| நியமம் 19 இன் 94 ஆம் பிரிவின் பிரகாரம் திறைசேரி முறிவிகிதம் 8.45 சதவீதம் அறிக்கைத் திகதியிலிருந்து பயன்படுத்தப்பட்டிருக்க முடியும். எனினும் நிறுவனமானது விகிதமாக 7 சதவீதத்தை பயன்படுத்தியிருந்தமையால் ரூபா 157,280,087 தொகை பணிக்கொடைக்காக ஒதுக்கீடு செய்கின்றது. அதற்கு மேலதிகமாக, ஊழியர் நன்மைகளை கணிப்பீடு செய்வது தொடர்பான வெளிப்படுத்தல்கள் நியமத்தின் 141 ஆம் பிரிவிற்கு முரணாக நிறுவகத்தால் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | விகிதத்திலிலுள்ள சிறிதளவு மாற்றமானது பணிக்கொடையின் ஒதுக்கீட்டில் அதிகளவில் பாதிக்கப்பட்டிருந்தது. ஆகையால், நாங்கள் இணையத்தளத்தினூடாக 6.5 சதவீத விகிதத்தை பெற்றிருந்ததுடன் பெறுமதியானது 7 சதவீதத்திற்கு மட்டமாக்கப்பட்டிருந்தது. | உரிய வெளிப்படுத்தல் கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) விசேட ஆராய்ச்சி செயற்திட்டங்களிற்காக பெறப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானியங்களிலிருந்து ஏற்படுத்தப்பட்ட செலவினத்திற்கு சமமான தொகையொன்று வருமானமாக இனங்காணப் பட்டிருக்க வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சொல்லப்பட்ட விசேட செயற்திட்டத்திற்காக ஏற்படுத்தப்பட்ட ரூபா 123,187,475 தொகையானது உரிய மானியங்களிலிருந்து கழிக்கப்பட்டிருக்காததுடன் வருமானமாக இனங் காணப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட மூலதன மானியங்களின் பெறுமதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | விசேட செயற்திட்டங்கள் தொடர்பாக பயன்படுத்தப்பட்ட உள்நாட்டு மற்றும் விசேட மானியங்கள் நடைமுறையல்லா பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருந்த துடன் ஒவ்வொரு செயற்திட்டங்களுடன் தொடர்புடைய அத்தகைய மானியங்கள் செயற்திட்டங்களின் ஒவ்வொன்றின் மீதும் குறித்த ஆண்டில் ஏற்பட்ட செலவினத்தின் பங்கீட்டு முறையில் மானியங்கள் கணக்கிற்கு மீளப்பெறப்பட்டிருந்தது. எனினும், ஏற்கனவே, பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து ரூபா 21,447,817 மீளப் பெறப்பட்டிருந்ததுடன் | ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்படுத்தப்பட்ட செலவினத்திற் குரிய வருமான பங்கீடானது உரிய மானிய கணக்குக ளிலிருந்து மீளப் பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இதுவரையிலும் வருமானமாக இனங் காணப்பட்டிருக்கவில்லை. அதனால், 2020 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் சரியான நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. 05 செயற்திட்டங்களிற்குரிய பெறுமதிகளை உள்ளடக்கிய ரூபா 139,312,882 தொகையானது ரூபா (160,760,699 - 21,447,817) பூர்த்தி செய்யப்படாமல் செயற்பாட்டிலுள்ளது. அதனால், சொல்லப்பட்ட பெறுமதியானது வருமானமாக ஒரு தடவை இனங்காணப்பட்டமையால் அது கணக்கீட்டு வருடத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படும் ஆகையால், ஒவ்வொரு செயற்திட்டம் தொடர்பாக குறித்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட செலவினத்திற்கு உரிய வருட பங்கீட்டிற்காக செயற்திட்ட கணக்கில் சீர்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட முடியுமென அறிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | கிண்ணியா மற்றும் சிலாபத்திலுள்ள தெங்கு நாற்றுத் தோட்டத்தை சுற்றி வேலியொ்றை அமைத்தல் மற்றும் அத்தகைய வேலியொன்றை முறையாக அடைப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட மெஸ்றோல்ஸ் போன்றவற்றின் நிர்மாணத்திற்காக ஏற்படுத்தப்பட்ட முறையே ரூபா 1,988,350 மற்றும் ரூபா 947,298 செலவினங்கள் செயற்திட்ட செலவினங்களின் கீழ் மீண்டுவரும் செலவினங்களாக காட்டப்பட்டிருந்தது. அதனால் ஆண்டின் மிகை மற்றும் | சரியான நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. | செலவீனம் கணக்கிற்கு கொண்டு வரும்போது பின்னர் மீண்டுவரும் செலவினம் மற்றும் மூலதன செலவினங்களாக வகைப்படுத்திய காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தோட்டத்தை முன்னேற்றல் கிரயம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,935,648 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் சிவப்பு வண்டுகளை கட்டுப்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,425,000 பெறுமதியான உபகரணங்களின் இருப்பு கொள்வனவு தொடர்பில் தவறான பேரேட்டு பதிவுகள் பலவகையான செலவினக் கணக்கு, பல்வகையான கடன்கொடுத்தோர்களின் கணக்கு, பங்களிப்புக் கணக்கு, சொத்துக்கள் பதிவழித்தல் கணக்கு மற்றும் காலக்கழிவு கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டது. அதனால் அத்தகைய கணக்கின் முறையே ரூபா 1,995,500 ரூபா 1,425,000 ரூபா 570,000 மற்றும் முறையே ரூபா 570,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்ட அதேநேரம், காலக்கழிவு கணக்காணது ரூபா 570,000 ஆல் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. | அதற்கான சரியான தன்மையை உறுதிப்படுத்திய பின்னர் கணக்குகளில் பேரேட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | ஆராய்ச்சி நிறுவகத்தின் நிதிசார் அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதிவரையில் தேங்காய் பயிர்ச் செய்கை சபையிடமிருந்து பெறவேண்டியகணக்கு மீதி ரூபா 35,298,009 தொகையாகும். எனினும், தேங்காய பயிர்ச்செய்கை சபையின் நிதிசார் அறிக்கைகளின் பிரகாரம் நேரொத்த மீதி ரூபா 42,129,005 தொகையாகும். அதற்கிணங்க அத்தகைய மீதிகளிற்கிடையே ரூபா 6,830,996 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. ஆனால் அத்தகைய மீதிகளை இனங்காண்பதற்கும் சீராக்கஞ் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைக்கப்பட்டிருக்க வில்லை. | பெறவேண்டிய மீதிகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | தெங்கு பயிர்ச் செய்கை சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 1,000,000 ஆரம்ப கொடுப்பனவு மற்றும் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட வெலிகமவிலுள்ள தேங்காய் விதை தோட்டம் தொடர்பில் வருடாந்தம் செலுத்தப்பட வேண்டிய ரூபா 25,000 குத்தகை வாடகை நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்பாக காட்டப்பட்டிருக்கவில்லை. | தெங்கு பயிர்ச்செய்கை சபையுடன் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கையிலுள்ள குறைபாட்டால் அந்த சர்ச்சை முடிவடையும் வரை பொறுப்புக்களாக காட்டப்பட்டிருக்கவில்லை. சர்ச்சைகள் தீர்க்கப்பட்டவுடன் பெறுமதி களானது பொறுப்புக்களாக கணக்குகளிற்கு எடுத்து வரப்படும். | உடன்படிக்கையின் பிரகாரம் கடப்பாடுகள் இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஊ) | நிறுவனத்தின் சம்பளங்களை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மென்பொருளை நவீனமயப்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,045,809 செலவினமொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அந்த பெறுமதியானது கணக்குகளில் அருவச் சொத்துக்களாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கணனிகளை திருத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட செலவினமொன்றாக இனங்காணப்பட்டது. அதனால் மீளாய்வாண்டிற்கான சொத்துக்களின் மிகையானது அந்த தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்கான கணக்குளினூடாக சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | கணனி மென்பொருளை சுவீகரித்தல், மற்றும் நவீனமயப்படுத்தல் போன்றன நிறுவகத்தின் அருவச் சொத்துக்களாக இனங்காணப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |
| (எ) | பல்லமவிலுள்ள ஜெனரிங் வளங்கள் நிலையத்திலுள்ள நீர்ப்பாசன முறைமையை நிர்மாணிப்பது தொடர்பில் இருந்த ரூபா 810,118 தொகையானது கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவுவைத்து அதேநேரம் ஆய்வுகூடம் மற்றும் பராமரிப்பு 880/93/38 கணக்கிற்கும் வரவு வைக்கப்பட்டது. ஆகையால்,ரூபா 810,118 தொகையினால் இலாபத்தினை குறைத்துக் காட்டப்பட்டமையால் கடன்கொடுத்தோர் கணக்கு மீதியானது அதேதொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்கான கணக்குளினூடாக சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. | செலவினங் களானது சரியான இனங்காணப்பட்டு கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | புத்தளம் மாவட்டத்திலுள்ள பல்லமவிலுள்ள அம்பக்கவ ஜெனரிக் வளங்கள் நிலையத்தின் நீர் தெளிப்பானை முறைமையுடன் தொடர்புடைய 5 சதவீதமான ரூபா 476,199 தொகையான பிடித்துச் செல்லுதல் பணத்தை விடுவிப்பதற்காக அதே தொகையில் பிடித்து வைத்தல் பணக் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு பதிலாக ஆய்வுகூட மற்றும் களப் பராமரிப்பு கணக்கிற்கு – 880/93/36 வரவு வைக்கப்பட்டிருந்தது. அதனால் மீளாய்வாண்டிற்கான இலாபமானது அதேதொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்கான கணக்குளினூடாக சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்குகளின் குறிப்புக்களிற்கான சரியான தன்மையை சரிபார்த்த பின்னர் கொடுக்கல் வாங்கல்கள் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட வேண்டும். |
| (ஐ) | வேளாண்மை பொருளாதார பிரிவின் புள்ளிவிபர பகுப்பாய்விற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 315,810 பெறுமதியான கணனி மென்பொருள் அருவச் சொத்துக்களின் கீழ் காட்டுவதற்கு பதிலாக கணனி கருவிகளாக கணக்குகளிற்கு எடுத்து வரப்பட்டது. | 2020 ஆம் ஆண்டிற்கான கணக்குளினூடாக சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. | கணனி மென்பொருள் கணக்குகளில் அருவச் சொத்துக்களாக காட்டப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 39,691,558 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 58,993,686 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 98,685,244 முன்னேற்றமானது அவதானிக்கப்பட்டது. தேங்காய் மற்றும் தென்னை மரக்கன்றுகளின் விலைகள் அதிகரித்தமையால் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான இருப்புக்களானது ரூபா 52,875,444 ஆல் அதிகரித்தமை செயற்பாட்டு விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 2.2 விகிதப்பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிலிருந்து மீளாய்வாண்டிற்கு விரைவு விகிதம் 1:1.04 இலிருந்து 1:0.41 இற்கு குறைவடைந்திருந்த அதேநேரம் நடைமுறை விகிதம் 1:1.42 இலிருந்து 1:0.925 இற்கு குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டில் 11.25 சதவீதமாக இருந்த விகித நட்டம் 6.60 சதவீத இலாபமாக வந்தது. இது தேங்காய் விற்பனை விலை மற்றும் தென்னை மரக்கன்றுகளில் ஏற்பட்ட அதிகரிப்பால் பிரதானமாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) தென்னை மைற்பீடையினை அடக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மீது 2000-2019 இன் போது தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தால் அமைச்சுரீதியான ஏற்பாட்டின் கீழ் ரூபா 13,767,434 செலவிமொன்று ஏற்படுத்தப்படடிருந்தது. தெங்கு ஆராய்ச்சி நிறுவகமானது 1999-2014 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது தென்னை மைற்பீடையினை அடக்குவதற்கு சிபாரிசுகள் மேற்கொண்டிருந்தது. ஆனால் 2014 ஆம் ஆண்டிலிருந்து தென்னை மைற்பீடையினை அடக்குவதற்கு எந்தவொரு சிபாரிசுகளையும் சபையானது மேற்கொண்டிருக்கவில்லை. ஆகையால் தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தால் மேற்கொண்ட சிபாரிசுகளினூடாக தென்னை மைற்பீடையினை அடக்குதற்கு குறிப்பிடத்தக்களவு குறைத்து கொள்ள முடிந்திருக்கவில்லை. களப் பரீட்சையில் எதிர்கொள்ளப்பட்ட நடைமுறை பிரச்சினைகளே அதற்குரிய காரணமாகவிருந்தது. என கணக்காய்வு அறிக்கையிடப்பட்டது. அதனால், நடைமுறை அணுகுமுறையுடனான புதிய தீர்வுகள் தென்னை மைற்பீடையினை அடக்குவதற்கு கண்டுபிடிக்கப்பட வேண்டும். | தென்னை மைற் பீடை போன்ற பூச்சிகள் மீது ஆராய்ச்சிகள் நடத்துவதற்கும் சிபாரிசுகள் நடாத்துவதற்கும் நீண்டகாலமானது தேவைப்படுகின்றது. உயிரியல் கட்டுப்பாடு மற்றும் எதிர்ப்பு இனங்கள் மீது நடாத்தப்பட்டு வருகின்ற ஆராய்ச்சிகள் மீது சிபாரிசுகளை மேற்கொள்வதற்கு 10-8 வருடங்கள் காலப்பகுதியானது செலவழிக்கப்படுமென்பதுடன் இது இந்த வகையான ஆராய்ச்சிகளிற்கான விதிமுறையாகவுள்ளது. குறுகிய கால ஆராய்ச்சிகளினூடாக பூச்சிகொல்லிகள் மீது சிபாரிசுகள் மேற்கொள்ளப்பட முடியும். ஆனால், இது போன்ற பூச்சிகளை கட்டுப்படுத்தலில் பூச்சிகொல்லிகளை பயன்படுத்துதல் நடைமுறையாகவோ அல்லது நிலைத்ததாகவோவிருக்கவில்லை. தென்னை மைற் பீடைகளினை அடக்குவதற்கு எங்களுடைய நிறுவனமானது இரண்டு சிபாரிசுகளை முன்னர் மேற்கொண்டது. அத்தகைய சிபாரிசுகளை அமுல்படுத்தும்போது எதிர்கொள்ளப்பட்ட நடைமுறைப் பிரச்சனைகளால் தென்னை | தென்னை மைற்பீடையினை அடக்குவதற்கு நடைமுறை தீர்வுக்ள இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மைற்பீடையினை அடக்குவது குறிப்பிடத்தக்களவு தடைசெய்யப்பட்டது. அதனால், அவர்கள் அதன்மீது ஆர்வம் காட்டப்படவில்லையென தென்படுவதுடன் நடைமுறை அணுகுமுறைகளை கண்டுபிடிப்பதற்கான அத்தியாவசியத்தன்மையானது ஏற்கனவே இனங்காணப்பட்டிருந்தது. | |
| (ஆ) | தெங்கு ஆராய்ச்சி நிறுவனமானது 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் 1,571,075 தெங்கு நாற்றுக்களை உற்பத்தி செய்தது. எனினும், 11,930 தெங்கு நாற்றுக்கள் மாத்திரம் 1998 இற்கு பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட கப்ருவான, கபசுவாய மற்றும் கப்சேதா போன்ற தெங்கு இனங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அது தெங்கு நாற்றுக்களின் உற்பத்தியின் 0.76 ஆகக் குறைந்த சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. அதற்கிணங்க, நிறுவனமானது தெங்கு நாற்றுத் தோட்டங்களை நிறுவுதல் மூலம் தேங்காய் உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் சொல்லப்பட்ட தேங்காய் உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம் தெங்கு இனங்களை மக்களிற்கிடையில் பிரபல்யப்படுத்துதற்கும் நிறுவகம் தவறியிருந்தது. | 2014/2013 ஆம் ஆண்டுகளின் போது சிலாபம் பெருந்தோட்ட வரையறுக்கப்பட்ட கம்பனியுடன் இணைந்து வருடமொன்றிகு 20,000 - 30,000 கப்ருவான தென்னை நாற்றுக்களினை உற்பத்தி செய்வதற்கு தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் இலக்கிட்டிருந்ததுடன் தெங்கு நாற்றுத் தோட்டமானது ஏற்கனவே நிறுவப்பட்டிருந்தது. அதற்கிணங்க, குறித்த காலத்தில் தெங்கு, நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படும் அதற்கு மேலாக, கப்ருவான, கப்சுவாய மற்றும் கப்செதா தெங்கு நாற்றுக்களின் உற்பத்தியானது கை மகரந்தச்சேர்க்கை ஊடாக தொடங்கப்பட்டதுடன் தொடங்கப்பட்டதுடன் நடைமுறையில் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக , விசேட செயற்திட்டங்களின் கீழுள்ள கப்சுவாய, மற்றும் கப்சேதா நாற்றுத்தோட்டங்களை நிறுவுவதற்கு செயற்திட்ட பிரேரணை யொன்று 2019 இல் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | புதிய தெங்கு விதை தோட்டங்கள் நிறுவப்பட வேண்டும். அதன் மூலம் கப்றுவன மற்றும் கப்சுவாய தெங்கு விதைகளை மக்களிற்கிடையில் பிரபல்யப்படுத்த நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வலிஹம் தென்னம் இலையிலுள்ள வில்ட் நோய்களினை எதிர்ப்பதற்காக பலவகையான தேங்காய்களை உற்பத்தி செய்வதற்கு தெங்கு நாற்றுத் தோட்டத்தை நிறுவுவதற்காக 16.15 பரப்பிலுள்ள வெலிகமவிலுள்ள தெங்கு விதை தோட்டமானது 10 வருட குத்தகையில் தெங்கு பயிர்ச்செய்கை சபையிடமிருந்து பெறப்பட்டிருந்தது. சொல்லப்பட்ட தோட்டத்திற்கு பலவகையான நாற்றுக்களை உற்பத்தி செய்வதற்காக பெண் தாவரமாக பச்சை குந்திராவையும் ஆண் மரமாக குந்திராவின் உயர வகையும் நடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இருந்த போதிலும், ஆண் மற்றும் பெண் மரங்களின் தேவையான எண்ணிக்கைகள் தனியாக இனங்காணப்பட்டிருக்காததுடன் ஆனால் 900 மரங்கள் தோட்டத்தில் நடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மரங்களின் எண்ணிக்கையாக காட்டப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதியளவில், 306 பெண் மரங்கள் மாத்திரம் மொத்த பரப்பில் 5 ஏக்கருக்கு மேலாக நடப்பட்டது. | வெலிகம தென்னம் இலையில் ஏற்படும் வில்ட் நோயை தடுப்பதற்குரிய தேங்காய் நாற்றுக்களினை உற்பத்தி செய்வதற்காக தெங்கு விதை தோட்டமொன்றை நிறுவவுதற்காக காணியொன்றை பெற்றுக் கொள்வதற்கு நீண்டகாலத்தில் பல்வேறு பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், ஆனால் காணியொன்றை கண்டுபிடிக்க முடிந்திருக்கவில்லை. இறுதியாக, தெங்கு பயிர்ச்செய்கை சபைக்கு சொந்தமான வெலிஹமவிலுள்ள தெங்கு நாற்றுமேடை குத்தகை அடிப்படையில் பெறப்பட்டதுடன் தேங்காய்களிற்குரிய மண் நிலைமையினை அடிப்படையாகக்கொண்டு மொத்தமாக 306 பெண் மரங்களை தோட்டத்தில் நடுவதற்கு முடிந்திருக்கும். | வெலிஹம், தென்னம் இலையில் ஏற்படுகின்ற வில்ட் நோயினை தடுப்பதற்குரிய வேறுபட்ட நாற்று விதைகளை உற்பத்தி செய்வதற்கு தேவையான தாய் மரங்களின் எண்ணிக்கை அடையாளங் காணப்பட வேண்டியதுடன் திட்டமிட்டவாறு நடப்பட்டமையால் செயற்திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஈ) | 2017 ஆம் ஆண்டில் தொடங்கி மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட தேசிய தெங்கு மீள்நடுதல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக உயர்ந்த வருமானத்துடனான தேங்காய் மரக்கன்றுகளை உற்பத்தி செய்வதற்குரிய செயற்திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் தோட்டமொன்றிற்கு 02 தென்னம் கன்றுகளாக 35,000 குடும்பங்களிற்கு 70,000 தேங்காய், கன்றுகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 20,000 தேங்காய் | 2017 ஆம் ஆண்டில் தொடங்கி மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட உயர்ந்த வருமானத்துடனான தேங்காய் மரக்கன்றுகளை உற்பத்தி செய்வதற்குரிய செயற்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் மழைக்காலத்தின் போது தேங்காய் மரக்கன்றுகளை விநியோகிப்பதற்குத் தயார்ப்படுத்தல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஆனால், அரசாங்க மாற்றங்கள் | செயற்திட்ட இலக்குகளை உடனடி விளைவுடன் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மரக்கன்றுகள் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் விநியோகிக்கப்பட்டிருந்தது. தெங்கு இனை உற்பத்தி செய்து விநியோகிப்பதிலுள்ள தாமததத்தால் நிறுவகமானது எதிர்பார்க்கப்பட்டவாறு தேங்காய்களை மீள நடுவதற்கு இயலாதிருந்தது. | நிலவியமையால் தேவையான அனுமதிகளை பெற முடிந்திருக்காமையால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மீண்டும் தேங்காய் மரக்கன்றுகளை விநியோகிப்பதனாது வட மாகாணத்தில் வறட்சி நிலவியமையால் 2019 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதி வரை பிற்போடப்பட்டிருந்தது. தற்போது மிகுதி 50,000 தெங்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. | |
| (உ) | பெரதெனியா பல்கலைக்கழகம், களனிய பல்கலைக்கழகம், கொட்டவல பாதுகாப்பு அக்கடமி மற்றும் நீர் வளங்கள் சபை போன்ற 08 நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 4,067,534 தொகையான முற்பணங்கள் 1-5 வருடங்களிற்கு மேலாக தீர்க்கப்படாதிருந்தது. | பெரதெனியா பல்கலைக்கழகம், களனிய பல்கலைக்கழகம், கொட்டவல பாதுகாப்பு அக்கடமி போன்ற நிறுவனங்களிற்காக ஆராய்ச்சிகள் முடிவுறுத்தப்பட்டாமையாக அத்தகைய முற்பணங்களின் மீதிக்ள கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. எனினும், முற்பணங்கள் ஏற்கனவே முடிவடைந்த வேலைகளின் அளவின் அடிப்படையில் தீர்க்கப்படும் என்பதுடன் முற்பணங்கள் மேலதிக வேலைகளை புதுப்பிப்பதற்காக பெறப்பட வேண்டுமென கடிதங்கள் மூலம் அறிவித்திருந்தார். இதற்கு மேலதிகமாக கணக்குப் பிரிவானது பரீட்சைகள் ஆணையாளர், சன்பிலவர் லங்கா லிமிட்டட் மற்றும் நீர் வளங்கள் சபைக்கு கொடுக்கப்பட்ட முற்பணங்களை தீர்ப்பதற்கு தேவையான ஆவணங்கள் பெறப்பட்டிருந்தது. | நிறுவனமானது குறித்த வேலைகளை நிர்ணயிக்கப்பட்ட நேரத்தினுள் பூர்த்தி செய்வதற்கும் அதன் மூலம் முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பூச்சிகள் மற்றும் நோய்களை கட்டுப்படுத்துதல், தேங்காய்களை செயன்முறைப்படுத்தல், தேங்காய்களுடன் இணைந்த உற்பத்திகள், மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் போன்றவற்றிற்கான ஆராய்ச்சிகளிற்களை நடாத்தவதற்காக நிறுவகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,544,338 பெறுமதியான இரசாயன பொருட்கள் 02 வருடங்களிற்கு மேலாக பயன்படுத்தப்படாமலிருந்தது. | ஆராய்ச்சிகள் திட்டமிடப்பட்டதுடன் தேவையான இரசாயனப் பொருட்கள் கட்டளையிடப்பட்டதுடன் அத்தகைய இரசாயனப் பொருட்கள் பல்வேறு படிமுறைகளில் பயன்படுத்தப்பட்டது. குறுகியகாலத்தில் குறைந்த அளவில் அத்தகைய இரசாயனப் பொருட்களை பெறுவதற்கு இயலாதிருந்ததுடன் கொள்வனவு கட்டளை மேற்கொள்ளப்பட்டதுடன் இரசாயனங்கள் பெறுவதில் நேரம் எடுக்கப்பட்டது. அதனால், இரசாயனப் பொருட்களின் இருப்புக்கள் ஆராய்ச்சிகளை தொடர்வதனை வசதியளிப்பதற்கு பராமரிக்கப்பட்டது. | மிகையான இருப்புகளினை அகற்றும் வகையில் இருப்புக்கள் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். |
| (எ) | 1992-2014 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது வெளிநாடு சென்று திரும்பாத 09 புலமைப்பரீட்சையாளர்கள் தொடர்பிலான உடன்படிக்கைகளின் பிரகாரம் நிறுவனத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 28,558,853 தொகையொன்று அலுவலர்கள் அல்லது உத்தரவாதிகளிடமிருந்து அறவிடப்பட முடிந்திருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, மீளாய்வாண்டில் வெளிநாட்டுச் சுற்றுலாவிற்காக ரூபா 776,856 முற்பணமானது இரண்டு உத்தியோகத்தர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்தது. | தென்னை ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் சொல்லப்பட்ட 09 புலமைப்பரீட்சையாளர்களுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையானது (2014-1992) காலப்பகுதியின் போது வெளிநாட்டிற்கு சென்று புலமைப்பரிசாளர்கள் திரும்பாமையால் மீறியிருந்தமையால் அவர்களில் 07 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, சட்டநாயகத் திணைக்களமானது, திருமதி பீ.ஜீ.சீ.ஹேவாவித்தற் மற்றும் திருவாளர் எஸ்.சீ சோமசிறிக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டது என தெங்கு ஆராய்ச்சி சபைக்கு அறிவித்திருந்தது. அதனால், குறித்த காலத்தில் இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | தொடரப்பட்ட வழக்கானது விரைவாக தீர்க்கப்பட வேண்டுமென்பதுடன் பணமானது அறவிடப்பட வேண்டும். அதற்கு மேலதிகமாக, நிறுவனமானது வெளிநாட்டு சுற்றுலாவிற்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் சுற்றுலாவின் இறுதிவரை தீர்க்கப்பட்டது என உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் ஊழியர் கொள்கையானது 2011 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், சிரேஷ்ட முகாமையாளர் (தோட்டம்) ஆராய்ச்சி உத்தியோகத்தர் (இயந்திர பொறியியல்) தோட்ட அத்தியட்சகர், தொழில்நுட்பவியலாளர் (அச்சிடல்) மற்றும் சாரதி போன்றோர்களின் 05 பதவி ஆட்சேர்ப்பு 03-08 வரையான காலப்பகுதியின் போது மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் சேவை தேவைப்பாடுகளின் அடிப்படையில் 2011.06.01 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் டிஎம்எஸ்/ஈ4/08/04/074/1-1 ஆம் இலக்க கடிதத்தினூடாக உத்தியோகத்தர் அனுமதிக்கப்ப்டிருந்தனர் அனுபவம் மற்றும் வயது வரையறையில் அடிப்படை தகைமைகளை கொண்ட வர்களை வேலைக்கமர்த்து வதிலுள்ள கஷ்டத்தால் சிரேஷ்ட முகாமையாளர் (தோட்டம்) பதவியிலுள்ள வெற்றிடம் நிரப்பட முடிந்திருக்கவில்லை. ஆராய்ச்சி உத்தியோகத்தர் (இயந்திர பொறியியல்) பதவிக்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்கள் பதிவு செய்திருந்த போதிலும், நேர்முகப் பரீட்சைகள் பங்குபற்றாமையால் வேலைக்கமர்த்த முடிந்திருக்கவில்லை. தோட்ட அத்தியட்சகர் பதவிகளிலுள்ள வெற்றிடமானது நிதி அமைச்சால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டமையால் அவ்வெற்றிடத்தை நிரப்ப முடியவில்லை. தொழில்நுட்பவியளாளர் (அச்சிடல்) பதவிக்கான விளம்பரங்கள் பல தடவைகள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், தகுதி வாய்ந்தவர்கள் அதற்கு பதில் அளித்திருக்காமையால் ஆட்சேர்ப்பு மேற்கொண்டிருக்கவில்லை சாரதி பதவிக்காக 08 வெற்றிடங்கள் நிதியமைச்சால் நிறுத்தப்பட்டமையால் அப் பதவிகளும் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | 2011 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கோ தகுதிவாய்ந்தவர்கள் இல்லாதவிடத்து வேலைவாய்ப்பை கொள்கையை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |